Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

**மாகாணக் கல்வித் திணைக்களம் சபரகமுவ**

**வாராந்த பாடசாலை**

**தமிழ்மொழி**

**வாரம் 01**

**தரம் 11**

1. கிருட்டினன் தூது என்ற பாடப்பரப்பில் இடம்பெறும் பின்வரும் செய்யுட்பகுதிகளைப் படித்து அதன் கீழ் வினவப்படுகின்ற வினாக்களுக்கு விடை தருக.

1) வயிரம் எனும் சுடு நெருப்பை மிக மூட்டி  
வளர்க்கின் உயர் வரைக்காடு என்ன  
செயிர் அமரில் வெகுளி பொர சேர இரு  
திறத்தேமும் சென்று மாள்வோம்  
கயிரவமும் தாமரையும் கமழ்பழனக்  
குருநாட்டில் கலந்து வாழ  
உயிர் அனையாய சந்துபட உரைத்தருள் என்றா  
அறத்தின் உருவம் போல்வான்.

i) இங்கு இடம்பெறும் அணியை இனங்கண்டு விளக்குக.

ii) குருநாட்டின் சிறப்பு எவ்வாறு பேசப்படுகின்றது?

2) குரவரையும் கிளைஞரையும் குலத்து உரிய  
துணைவரையும் கொன்று போர் வென்று  
அரவ நெடுங்கடல் ஆடை அவனி எலாம்  
தனி ஆளும் அரசு தன்னில்  
கரவு உறையும் மனத் தாதை முனிக்கு உரைத்த  
மொழிப்படியே கானம் தோறும்  
இரவு பகல் பல மூல சாகம் நுகர்ந்து  
உயிர் வாழ்தல் இனிது நன்றே.

i) குரவு உறையும் மனத்தாதை, முனி எனக் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?

ii) பலமூல சாகம் எனப்படுவது யாது?